சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 16.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

**.....**

**வழக்கு எண். NC 2386/E/2022 (SA 2418/E/2022)**

திரு.M.Lakshmana Perumal -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
மதுரை மேற்கு வட்டம்,
மதுரை மாவட்டம் .

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தின் 11.07.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.ராஜகுமாரன், வட்டசார் ஆய்வாளர், மதுரை மேற்கு அவர்கள் இவ்வாணையத்தில் 13.03.2026 அன்று நேரில் ஆஜராகி, மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர், மதுரை மேற்கு வட்டம், மதுரை அவர்களின் 02.03.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவணங்களை 30.10.2025 அன்று பார்வையிட பொதுத் தகவல் அலுவலரின் 23.10.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக அழைக்கப்பட்டு, எனது கோரிக்கை மனுக்கள் தங்கள் தங்கள் அலுவலகத்தில் வரப்பெற்ற நாள் முதல் இன்றுவரை நேரில் விசாரணை நடத்திட வேண்டிய மனுதாரரான எனக்கு அனுப்பிய அழைப்பாணை கடிதங்களின் ஒளிநகலினை மனுதாரர் கோரியதாகவும், அதன்படி மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலர்/ வட்ட சார் ஆய்வாளர், மதுரை மேற்கு அவர்களின் கடித ந.க.எண்.J/4584/2023,

நாள் 02.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக சமர்ப்பித்துள்ள அறிக்கையினை ஆணையம் ஏற்கிறது.

3. மேலும், மனுதாரரின் சட்டப் பிரிவு 6(1) மனுவிற்கு வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ரசியாபேகம் எனவும், அவர் 31.12.2023 அன்று மதுரை மேற்கு அலகு-2, நகர நிலவரித்திட்ட அலுவலகத்திற்கு பணிமாறுதலில் சென்றுவிட்டதாகவும், மேலும் கடந்த 31.12.2024 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அவரிடம் விசாரணை செய்ய முகவரி ஏதும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ள அறிக்கையினை ஆணையம் பதிவு செய்கிறது.

4. **மேலும், வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள், மனுதாரருக்கு தகவல் வழங்காத வகைக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 19(8)(b)-ன்கீழ் இழப்பீட்டுத் தொகையான ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) SBI CODE No.00869 பிரிவில் Demand Draft No. 086825 என்ற எண்ணின் கீழ் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.**

5. எனவே, ஆணையத்தின் உத்தரவு நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 2386/E/2022 (SA 2418/E/2022)</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை மேற்கு வட்டம், மதுரை மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.M.Lakshmana Perumal, த/பெ.சி.மாணிக்கம் ஆசாரி,
18, 19 சாமி ஆசாரி சந்து, சின்னக்கடைத் தெரு,
தெற்குவாசல், மதுரை - 625 001.

Copy to: File MP/PA,